1975 அக்டோபர் 25]

(5) 1969-70 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1969–70 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின்கண் வைக்க முன் வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருக்கிறது. அத்த கைய செலவினங்கள் பற்றிய விவரங்களை இம் மானியக் கோரிக்கையில் காணலாம்.

2. 1973–74 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு, 1969–70 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகி யிருப்பதைக் குறிப்பிட்டுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங் களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்கு மானியக் கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு பரிவுரை செய்தது. அவ்வண்ணமே, 1969–70 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் கண் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 9.44 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் சாட்டிய செலவினமாகும். இதுவே 6.11 கோடி ரூபாய் அளவுக்குப் பெரிய இனமாக இருக்கிறது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையான தற்குக் காரணம் என்ன என்பது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட் டுள்ளது.

3. 1969–70 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன்.